DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : காளிராஜ் | Father/Husband Name : பண்ணாயிரம் |
| Age : 59 | Village : புதுஅப்பனேரி |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02.03.2026.

(A3 charge abated, A1, A2 and A4 not present. Petition under Section 317 CrPC filed and allowed.)

**முதல் விசாரணை** :–

1. நான் தற்போது வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாள்ர திரு.சதிஷ்குமார் என்பவரை தெரியும், அவர்ருடைய கையெழுத்தும் எனக்கு நன்கு தெரியும். அவர் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 02.08.2020ம் தேதி 17.00 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது சாத்தூர் செந்தில் தனியார் மருத்துவமனையில் கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழச்சத்திரம் பால்ராஜ் மகன் ஈஸ்வரன் என்பவரை பார்த்து விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 565/2020 பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.**(புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்னர் அன்றே மாலை 06.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் முனியாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

5. பின்னர் சாட்சிகள் ஈஸ்வரன், ஆறுமுகம், குருவையா, ஈஸ்வரி, சுதந்திரம், முனீஸ்வரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 30.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு மேல் சிகிச்சை அளித்த சாத்தூர் ஆரோ ஆர்த்தோ கிளினிக் மருத்துவர் திரு.செல்வக்குமார் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்றுள்ளார். (**காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 30.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு மேல் சிகிச்சை அளித்த சாத்தூர் செந்தில் மருத்துவமனை மருத்துவர் திரு.வேலுச்சாமி அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்றுள்ளார். (**காயச்சான்று அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. பின்னர் 01.10.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனையின் உதவி மருத்துவர் திருமதி.நிரஞ்சனி

அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு.முருகன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

7. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச–ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

8. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.